பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

07 09 2026 MONDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நாடுமுழுவதும் ஐந்து சட்டப்பேரவை மற்றும் ஒரு மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2. போதைப்பொருள் ஒழிப்பில் இளையோர் உறுதியுடன் பங்கேற்க வேண்டும் என்று குடியரசுத் துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மருத்துவ சுற்றுலா துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்

4. உத்தரபிரதேசத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்தனர்.

5. உலக பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் ஐந்து சட்டப்பேரவை மற்றும் ஒரு மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தின் மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளிலும், புதுச்சேரியின் தட்டாஞ்சாவடி சட்டப்பேரவை

தொகுதியிலும், மேற்குவங்கத்தில் *Rejinagar, Nandigram* சட்ப்பேரவை தொகுதிகளிலும், அஸ்ஸாமின் *Nagaon* மக்களவைத் தொகுதியிலும் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வரும் 9ஆம் தேதி தொடங்கி, 16ஆம் தேதிவரை நடைபெறும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மனுக்கள் மீதான பரிசீலனை 17ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 19ஆம் தேதி கடைசிநாளாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 9ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகுதிகளில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

போதைப்பொருள் ஒழிப்பில் இளையோர் உறுதியுடன் பங்கேற்க வேண்டும் என்று குடியரசுத் துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

குவஹாத்தி பல்கலைக் கழகத்தில் இன்று உரையாற்றிய அவர், போதைப் பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து இளையோர் அறிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் போதைப் பொருளுக்கு எதிரான உறுதிமொழியையும் குடியரசு துணைத் தலைவர் செய்து வைத்தார்.

>>>>>><<<<<<

*நாட்டின் பொருளாதாரம் சீராக வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.*

*இன்று பனாஜியில் குடியரசுத்தலைவரின் காவல் பதக்கங்களை வழங்கி அவர் பேசினார்.*

*சர்வதேச அளவில் பொருளாதர தேக்கநிலை காணப்பட்ட போதிலும், நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி, நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 7 புள்ளி எட்டு சதவீதம் என்ற சாதனை அளவை எட்டியதாக அவர் தெரிவித்தார்.*

*மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்குக் காரணம் என்றும் திரு. அமித் ஷா கூறினார்.*

>>>>>><<<<<<

*மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், சர்வதேச செலாவணி நிதியத்தின் துணை மேலாண் இயக்குநர் திரு. Nigel Clark-குடன் இன்று புதுதில்லியில் பேச்சு நடத்தினார்.*

*இந்தியாவுக்கும், சர்வதேச செலாவணி நிதியத்திற்கும் இடையேயான நல்லுறவு குறித்து இந்த பேச்சுக்களின் போது விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*சர்வதேச பொருளாதார சூழல் குறித்தும், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

>>>>>><<<<<<

மருத்துவ சுற்றுலா துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சுகாதார சேவை மற்றும் நலவாழ்வு தொடர்பான கண்காட்சியை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மருத்துவ சுற்றுலாவில் இந்தியா முன்னணியில் திகழ்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட துறையினர் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கடந்த ஏழு ஆண்டுகளில் மட்டும் 35 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்தியாவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளதாக அவர் கூறினார்.

வருடத்திற்கு ஒரு கோடி வெளிநாடுகளைச் சேர்ந்த நோயாளிகள் சிகிச்சை பெற வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஆயுர்வேதா தினம் மக்கள் இயக்கமாக உருவெடுக்க வேண்டியதன் அவசியத்தை ஆயுஷ்துறை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆயுர்வேதா தினம் வரும் 23ஆம் தேதி கொண்டாடப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இதுதொடர்பான பிரதான நிகழ்ச்சி நாக்பூரில் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்கால ஆரோக்கியத்திற்கு ஆயுர்வேதா என்ற மையக்கருத்துடன் இந்த தினம் கொண்டாடப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மகளிர் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் திறன் மேம்பாட்டு முகாமை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா இன்று ஃபரிதாபாதில் இன்று தொடங்கி வைத்தார்.

நாடுமுழுவதிலுமிருந்து மகளிர் சட்டப்பேரவை உறுப்பினர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

தலைமைத்துவப் பண்பு மற்றும் பேச்சாற்றல் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் இதில் வழங்கப்படும் என்று இதற்கு ஏற்பாடு செய்துள்ள தேசிய மகளிர் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

தில்லி கட்டிட விபத்து தொடர்பாக, அதன் உரிமையாளர் கைது செய்யப்பட்டிருப்பதாக முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த விபத்து தொடர்பாக 5 அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

கட்டிடங்களின் பாதுகாப்புத்தன்மை குறித்து ஆய்வு மேற்கொள்ளும் வகையில், கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்றும் திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மேற்குவங்கத்தில் அனைவருக்கும் குறைந்த செலவில் உயரிய சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. Suvendu Adhikari கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மாநிலத்தில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் ஆயுஷ்மான் பாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 3 கோடிக்கும் மேற்பட்டோருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதன்மூலம் பயனடைந்துள்ளதாகவும் திரு. Suvendu Adhikari கூறினார்.

>>>>>><<<<<<

தேசிய நெடுஞ்சாலைகளின் பாதுகாப்பு குறித்து உரிய ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு கேரள முதலமைச்சர் திரு. V. D. Satheesan வி மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

கேரளத்தின் தேசிய நெடுஞ்சாலை எண் 66-ல் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

பயணிகளின் பாதுகாப்பில் எவ்வித சமரசமும் இன்றி சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திரு. V. D. Satheesan அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

>>>>>><<<<<<

மிஸோரமில் இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்குப் பின்னர், இப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. Garima Gupta செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதில் 8 லட்சத்து 35 ஆயிரத்து 869 பேர் இடம்பெற்றுள்ளதாக அவர் அதில் கூறியுள்ளார்.

32 ஆயிரத்து 280 பேர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, 39 ஆயிரத்து 243 பேர் புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திருமதி. Garima Gupta கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்தனர்.

Baghpat மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் யாத்ரிகர்களுடன் சென்று கொண்டிருந்த வேன், மினி லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் திரு. Mohammed Nadimul Haque தொடர்புடைய வழக்கின் அடிப்படையில், அமலாக்கத்துறையினர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று சோதனை மேற்கொண்டனர்.

7 மாநிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த சோதனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்டில் இடிமின்னல் தாக்கியதில் 2 பெண்கள் உயிரிழந்தனர், 3 பெண்கள் காயமடைந்தனர்.

Saraikela - Kharsawan மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் இந்த சம்பவம் நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

பாகிஸ்தானில் நேரிட்ட இருவேறு சாலை விபத்துகளில் 16 பேர் உயிரிழந்தனர், 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பஞ்சாப் மாகாணத்திற்கு உட்பட்ட பகுதியில், திருமண நிகழ்ச்சிக்காக சென்று கொண்டிருந்த டிராக்டர், லாரி மீது மோதிய விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர், 50 பேர் காயமடைந்தனர்.

சிந்து மாகாணத்திற்கு உட்பட்ட பகுதியில், பேருந்து ஒன்று நிலை தடுமாறி மரத்தின் மீது மோதிய மற்றொரு விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

*இந்த விபத்தில் காயமடைந்த 4 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.*

*>>>>>><<<<<<*

*உலக பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் Tanvi Pravin Ingale வெள்ளிப்பதக்கத்தையும், Yugal Garg வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.*

*ஆடவர் மற்றும் மகளிர் குழுப் பிரிவுகளில் இந்தியா வெண்கலப்பதக்கங்களை கைப்பற்றியது.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் Sheetal Devi இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*அரையிறுதி ஆட்டத்தில் அவர், 145-க்கு 143 என்ற புள்ளிக்கணக்கில் இந்தியாவின் Sarita-வை வென்றார்.*

*>>>>>><<<<<<*

*வியட்நாமில் நடைபெற்ற உலக கோப்பை Pickel Ball சாம்பியன் போட்டியில் இந்தியா 7 தங்கம், 20 வெள்ளி, 19 வெண்கலப்பதக்கதங்களை வென்றது.*

*>>>>>>END<<<<<<*